**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.60/2024**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உலகம்மாள் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சின்னச்சாமி | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | ஊத்துமலை | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஐ எனக்கு தெரியும். எதிரி முகேஷை எனக்கு தெரியும். 2, 3 வருடங்களுக்கு முன்பு நான் வேலைக்கு போய்விட்டு கஞ்சி காய்ச்சி கொண்டிருந்தேன். நான் வெளியே எட்டி பார்த்தபோது, சத்தம் கேட்டது. அதன் பின்னர் நான் வீட்டிற்குள் போய் விட்டேன். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 04.03.2023ம் தேதி, இரவு 10.15 மணிக்கு நானும், முத்துக்குமாரும் எங்கள் வீட்டு தெரு விளக்கு பக்கம் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் கூட்டமாக இருந்தது. அப்போது, எதிரி முகேஷ் மகேந்திரனை அழைத்தார் என்றால் சரியல்ல. இராசாத்தி,

வெள்ளத்துரை, மகேந்திரன் ஆகிய 3 பேரும் வெளியே வந்தபோது, முகேஷ் மகேந்திரனை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. முகேஷ் சட்டைக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து மகேந்திரனின் கழுத்தை நோக்கி வெட்டும்போது, அந்த வெட்டு அவரது பின்புறத்தில் பட்டு இரத்தம் வந்தது என்றால் நான் நேரடியாக பார்க்கவில்லை. மகேந்திரன் மருத்துவமனைக்கு போனதாக கேள்விபட்டேன். நானும், அக்கம் பக்கம் உள்ளவர்கள் சத்தம் போடவும், எதிரி மகேந்திரனை பார்த்து கொலை மிரட்டல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.10 13:12:23 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.60/2024**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மருதைய்யா | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | ஊத்துமலை | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஐ எனக்கு தெரியும். அவர்கள் எனது வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். எதிரி முகேஷை எனக்கு தெரியும். மகேந்திரன் வெட்டுப்பட்டது நேரடியாக தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் ஊத்துலையில் ஆட்டோ ஓட்டி கொண்டிருந்தேன். இரவு சுமார் 11.00 மணியளவில் மகேந்திரன் வீட்டு பக்கம் கூட்டமாக இருந்தது. அங்கு நின்று கொண்டிருந்தவர்களிடம் கேட்டபோது, மகேந்திரனை எதிரி முகேஷோ, அவரது தம்பியோ வெட்டி விட்டதாக சொன்னார்கள். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 04.03.2023ம் தேதி, இரவு 10.15 மணிக்கு நானும், உலகம்மாள் என்பவரும் எங்கள் வீட்டு தெரு விளக்கு பக்கம் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது, எதிரி முகேஷ் மகேந்திரனை அழைத்தார் என்றால் சரியல்ல. இராசாத்தி, வெள்ளத்துரை, மகேந்திரன் ஆகிய 3 பேரும் வெளியே வந்தபோது, முகேஷ் மகேந்திரனை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. முகேஷ் சட்டைக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து மகேந்திரனின் கழுத்தை நோக்கி வெட்டும்போது, அந்த வெட்டு அவரது பின்புறத்தில் பட்டு இரத்தம் வந்தது என்றால் நான் நேரடியாக பார்க்கவில்லை. மகேந்திரன் மருத்துவமனைக்கு போனதாக கேள்விபட்டேன். நானும், அக்கம் பக்கம் உள்ளவர்கள் சத்தம் போடவும், எதிரி மகேந்திரனை பார்த்து கொலை மிரட்டல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.10 13:12:32 +0530